விடுமுறைக்கால செயலட்டை : 2021
பாட அலகு : சமய குரவர்
பாட நூல் பக்கம் : 74

01. சரியான விடையின் கீழ் கோடிடுக.

i. திருநாவுக்கரசரின் இளமைப்பெயர்.
1. திருவாதவூரர் 2. புகழனார்
3. நம்பியாரூரர் 4. மருணீக்கியார்

ii. திருநாவுக்கரசர் பாடிய பாடல்கள் எத்தனையாம் திருமுறையில் அடங்கும்?
1. 1,2,3 ஆம் திருமுறை 2. 4,5,6 ஆம் திருமுறை
3. 7 ஆம் திருமுறை 4. 8 ஆம் திருமுறை

iii. திருநாவுக்கரசர் பாடிய முதல் பாடல் எது?
1. கூற்றாயினவாறு 2. பொன்னார் மேனியனே
3. சொற்றுணை வேதியன் 4. ஒன்று கொலாமவர் சிந்தை

iv. “உழவாரப் படையாளி” எனப் போற்றப்படும் நாயன்மார் யார்?
1. திருஞானசம்பந்தர் 2. திருநாவுக்கரசர்
3. சுந்தரமூர்த்தி நாயனார் 4. மாணிக்கவாசகர்

v. திருநாவுக்கரசர் அருள் பெற்ற தலம் எது?
1. திருவதிகை 2. சீர்காழி
3. திருவெண்ணை 4. சிதம்பரம்

02. சமய குரவர் நால்வரினதும் படங்களை ஒட்டி பின்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக.

| | சமயக்குரவர் நால்வர் | திருஞான சம்பந்தர் | திருநாவுக்கரசர் | சுந்தரர் | மாணிக்கவாசக சுவாமிகள் |
|---|---|---|---|---|---|
| அ | மறுபெயர்கள் | 1. | | | |
| | | 2. | | | |
| | | 3. | | | |
| ஆ | உறவுமுறை | | | | |
| இ | நின்ற நெறி | | | | |
| ஈ | அடைந்த முத்தி | | | | |
| உ | முத்தி அடைந்த தினம் | | | | |

03. சிறு குறிப்பு எழுதுக.

அ. திருஞானசம்பந்தர்
ஆ. திருநாவுக்கரசர்

04. திருஞானசம்பந்தர் , திருநாவுக்கரசர் ஆகிய நாயன்மார்கள் செய்த அற்புதங்களையும் , அச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்ட பதிகங்களையும் எழுதுக.

05. திருஞானசம்பந்தர் பற்றிய பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

i. திருஞானசம்பந்தர் பிறந்த ஊர் எது?
ii. இவரது பெற்றோரின் பெயர்களை குறிப்பிடுக.
iii. "தோடுடைய செவியன்" எனும் பதிகத்தை பாடிய சந்தர்ப்பத்தை எழுதுக.
iv. "ஆளுடையப் பிள்ளையார்" எனப் பெயர் பெறக்காரணம் யாது?
v. சிவபெருமானிடத்திலிருந்து சம்பந்தர் யாது பெற்றார்?
vi. ஆளுடையப்பிள்ளையார் பாடிய பதிகங்களை யாழில் அமைத்துப் பாடியவர் யார்?
vii. முயலகன் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த அரசனின் மகளை எப்பதிகம் பாடி குணப்படுத்தினார்?
viii. திருஞானசம்பந்தர் முதலிலும் இறுதியிலும் பாடிய பதிகங்கள் எவை?
ix. சம்பந்தப் பெருமான் திருமறைக்காட்டில் கதவு மூடப்பாடிய பதிகம் எது?
x. திருஞானசம்பந்தரால் பாடல் பாடப்பெற்ற ஈழத்துச்சிவாலயங்கள் எவை?

06. திருநாவுக்கரசர் பற்றிய பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

i. திருநாவுக்கரசர் பிறந்த ஊர் எது?
ii. இவருக்கு சமணர்கள் இழைத்த கொடுமைகள் யாவை?
iii. இவரது தமக்கையாரின் பெயர் என்ன?
iv. திருநாவுக்கரசர் பாடிய இறுதிப் பாடல் யாது?
v. இவர் வாழ்ந்த காலம் எது?
vi. திருஞானசம்பந்தரும் , திருநாவுக்கரசரும் இணைந்து நிகழ்த்திய அற்புதங்கள் எவை?
vii. இறைவனிடம் திருவடி தீட்சையை எங்கே பெற்றார்?
viii. கைலாய காட்சியை எங்கு கண்டு மகிழ்ந்தார்? அப்போது அவர் பாடிய பாடல் என்ன?
ix. திருநாவுக்கரசர் எம்மார்க்கத்தை கடைப்பிடித்தார்?